## தென்னை அபிவிருத்தி அதிகாரசபை - 2013

தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளையும் ஏனைய வெளிப்படுத்தல் தகல்வல்களின் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 46 ஆம் இலக்க தென்னை அபிவிருத்தி அதிகாரச்சட்டத்தின் 43 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இவ்வறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) ஆம் பிரிவின் பிரகாரம் ஒரு விரிவான அறிக்கை அதிகாரசபையின் தலைவருக்கு காலக்கிரமத்தில் வழங்கப்படும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். உயர் கணக்காய்வு நிறுவனத்தின் சர்வதேச கணக்காய்வு நியமங்களைப் (ISSAI 1000 – 1810) பின்பற்றி இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றியகணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்திற்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

தென்னை அபிவிருத்தி அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

அதிகாரசபையின் சொத்துக்கள் பல்வேறு ஆண்டுகளில் மீள விலைமதிக்கப்பட்டுள்ளதுடன் அச் சொத்துக்கள் மீள விலைமதிக்கப்பட்ட முறை தொடர்பான தகவல்கள் கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

அதிகாரசபையால் மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வைக் கணிப்பிடுகையில் கட்டிடப் பெறுமானத்தேய்வு ரூபா 825,820 இனாலும், அலுவலக உபகரணப் பெறுமானத்தேய்வு ரூபா 217,354 இனாலும் அதிகரித்தும் ஆய்வுகூட உபகரணங்கள் பெறுமானத்தேய்வு ரூபா 68,682 இனால் குறைத்தும் கணிப்பிடப்பட்டிருந்தன.,

#### 2.2.3 பெறப்பட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையால் 2006 ஆம் ஆண்டில் கமத்தொழில் கம்பனியொன்றிற்கு ரூபா 2,000,000 கடன் தொகை வழங்கப்பட்டிருந்ததுடன் உடன்படிக்கையின் படி கடன் வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மதங்களிற்குள் வட்டியின்றி சம தவணைக் கட்டணங்களில் மீளளிக்கப்பட வேண்டிய போதிலும், 02 சந்தர்ப்பங்களில் ரூபா 550,000 மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் ரூபா 1,450,000 நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரையிலும் அதிகாரசபை தவறியிருந்தது.

(ஆ) அதிகாரசபையின் உத்தியோகத்தர் ஒருவர் துஷ்பிரயோகம் செய்திருந்த பணத் தொகை மற்றும் அதற்குரிய வட்டியான ரூபா 1,752,462 தொகை 1998 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியதாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) தேங்காய் எண்ணை ஆலைகளின் உரிமையாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கட்டணங்களும் புதிய தேங்காய்கள் மற்றும் கொப்பரா என்பவற்றின் ஏலமிடல் நடவடிக்கைகளிலிருந்து அறவிடப்பட வேண்டிய நில வாடகை ரூபா 2,756,691 தொகையும் மீளாய்வாண்டின் இறுதிவரை அறவிடப்பட வேண்டியதாக இருந்தது.

## 3. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி, மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவுகள் ரூபா 36,419,413 மிகையொன்றானதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 9,681,156 உடன் ஒப்பிடுகையில், நிதி விளைவுகளில் ரூபா 46,100,569 அதிகரிப்பைக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 36,347,521 இனால் குறைவடைந்திருந்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

அதிகாரசபையின் மொத்த வருமானத்தில் 67 சதவீதம் திறைசேரி ஏற்பாட்டினையும் 14 சதவீதம் வட்டி வருமானத்தினையும் 17 சதவீதம் செயற்பாட்டு வருமானத்தினையும் 2 சதவீதம் நானாவித வருமானத்தினையும் உள்ளடக்கியிருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீளாய்வாண்டில் செயலாற்றல் மிகக் குறைந்த மட்டத்தில் நிலவிய சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

(அ) பொதியிடல் அபிவிருத்தி பிரிவினையும் பிரதேச கைத்தொழில்களையும் வலைப்பின்னல்படுத்தல் மூலம் தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களின் தகவல்களை சேகரிப்பதற்கான தரவு முறையையொன்றை பராமரித்துச் செல்வதற்காக 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ரூபா 694,000 செலவிடப்பட்டிருந்த போதிலும், இந்த முறைமை மீளாய்வாண்டின் இறுதி வரை தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ‘‘கப்றுக புரவர’’ நகர கிராமங்களில் காணப்படுகின்ற இனங்காணப்பட்ட தேங்காய் எண்ணை ஆலைகளின் தரத்தினை மேம்படுத்துவதற்காக 37 ஆலைகளை நவீனமயப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரை இது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

பின்வரும் அவதானிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெங்கு சார்ந்த கைத்தொழிலாளர்களின் உற்பத்திகளை சர்வதேச சந்தைக்கு அறிமுகப்படுத்துவதற்காக ரூபா 3,471,975 செலவில் மீளாய்வாண்டில் ஜேர்மனியில் இடம்பெற்ற வர்த்தகக் கண்காட்சியில் ரூபா 80 மில்லியன் கட்டளைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்த போதிலும், அதன் செயன்முன்னேற்றம் மீளாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ‘‘நிபயும் பியச’’ நிலையங்களில் பிரதான உற்பத்திப் பொருளான ‘‘பிரஷ்’’ உற்பத்திக்காக உயர் தரத்திலான ‘‘பிரிஸ்டல் பைபர்’’ இனை பெற்றுக்கொள்ளும் பொருட்டு ரூபா 640,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட பாதுகாப்பாக தென்னம் மட்டைகளை வைக்கும் இயந்துரத்துடன் கூடிய பாரம்பரிய பெட்டிகள் 2014 நவம்பர் 20 ஆந் திகதி வரை கைத்தொழில் அபிவிருத்தி சபையில் வைக்கப்பட்டிருந்தன.

(இ) “கப்றுக” உற்பத்திகளை ஆர்வமூட்டல் கடன் திட்டத்தின் கீழ் அதிகாரசபையில் பதிவுசெய்யப்பட்டிருக்காத மூன்று கைத்தொழிலாளர்களிற்கு ரூபா 2,600,000 கடன் தொகைக்கு வட்டிச் சலுகை வழங்கப்பட்டிருந்ததுடன், ஒரு சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொண்டிருந்த மொத்தத் தொகையும் பயன்படுத்தப்படாதிருக்கையில் முழுக் கடன் தொகைக்கும் வட்டிச் சலுகை வழங்கப்பட்டிருந்தது.

**4.3 பதவியணியினர் நிர்வாகம்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 166 ஆகவும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 132 ஆகவும் காணப்பட்டமையால் செயற்பாட்டு நடவடிக்கைகளிற்கு உரித்தான 34 பதவிகள் மீளாய்வாண்டின் இறுதியளவில் வெற்றிடமாக காணப்பட்டன.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிகளின் பயன்படுத்தல்
(இ) பெறவேண்டிய கணக்குகள்